**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.65/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லலிதா | மதம் | : இந்து |
| க/பெ | : மணி | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் : | எலுமிச்சை வியாபாரம் | வட்டம் | : திருத்தணி |

**02.02.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் அரசாங்கம் தாக்கல் செய்த எதிர்வழக்குரை பற்றி தெரியுமா என்றால் தெரியும். தனம்மாளுக்கு வாரிசுகளே இல்லை என்று எதிர்வழக்குரை அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் அம்மாவிற்கு 3 பெண்கள் உள்ளோம். ஆண் பிள்ளை இல்லை. தனம்மாளுக்கு வாரிசு உள்ளோம் என்பதை காட்ட வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 27.07.2018ல் முதன் முதலில் பிரச்சனை வந்து கௌரி, லலிதா, லட்சுமி சேர்ந்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் ஆமாம். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள A அட்டவணை சொத்து தனம்மாளுக்கு சொந்தமானது என சொல்லியுள்ளோம் என்றால் அம்மாவிற்கு தனியாகவும் சித்தி தேசம்மாளுக்கு சொத்து தனியாக இருந்தது. அவர்கள் இருவருக்கும் தனித்தனியாக வழி இருந்தது.

2. மேற்படி தனம்மாள் பெயருக்கு கொடுத்த பட்டா வா.சா.ஆ 7 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் வா.சா.ஆ7ன் ஒரு பகுதிதான் வழக்கு பி அட்டவணை சொத்து என நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நானும் என் சகோதரிகளும் குமார் என்ற வழக்கறிஞரை வைத்து முதலில் ஒரு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் இல்லை. முதலில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பின்பு மாவட்ட ஆட்சியரிடம் சென்று கிழக்கு பக்கம் மனைக்காரர்கள் கொட்டகை போட்டர்கள், மேற்கு மனைக்காரர்கள் மரத்தை வெட்டி போட்டார்கள். அதை அகற்றவில்லை நாங்கள் கேட்டதற்கு அடிக்க வந்தார்கள். அதன் பின்பு வழக்கறிஞரை வைத்து நாங்கள் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் இல்லை. நான்

வழக்கறிஞர் வைத்து வழக்கறிவிப்பை அனுப்பிவிட்டு தற்போது தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் காவல்துறையிலும் மாவட்ட ஆட்சியரிடமும் மனு கொடுக்காததால்தான் அவர்கள் எங்கள் மனுவிற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தேசம்மாளுக்கு வழக்கு சொத்து சொந்தம் என்பதை காட்ட எந்த ஆவணத்தையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எங்கள் கணவர் தேசம்மாளுக்கு சொத்து பாத்தியம் என்று அவராக கையெழுத்திட்டு ஆவணம் தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணம் நான், என் கணவரும் சேர்ந்து பொய்யாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. நாங்கள் 50, 60 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். நானும் என் சகோதரிகளும் அனுப்பிய அறிவிப்பில் தனம்மாள் சொத்தின் ஒரு பகுதி என சொல்லப்படுகிற சொத்தின் ஒரு பகுதியான 1302 சொத்து சதுரடி சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் என் கணவர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் எந்த அளவுகளும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அரசு தனம்மாளுக்கு வாரிசுகளே இல்லை என சொல்லியுள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள பட்டாவின்படி எங்களுக்கு எந்த உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்காக நான் சாட்சி சொல்ல எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தேசம்மாளும் தனம்மாளும் சகோதரிகள் என்பதை நிரூபணம் செய்ய நாங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போதே அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துவிட்டோம். வழக்கு சொத்திற்கும் தேசம்மாளுக்கும் தனம்மாளிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 5,6, 9, 10 பிரதிவாதிகள் தரப்பில் ஒத்திவைக்கப்படுகிறது)